**கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை - 2023**

---

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பான இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1969 இன் 12 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனை தாபன (திருத்திய) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு இணங்க பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என நான் கருதுகின்ற எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

**1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(1) உபபிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களினாலும் அந்த நிறுவனம் தொடர்பான வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) உபபிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் ஒன்று தொடர்பாக ஆளுகை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காட்டக்கூடியவாறு காலப் பகுதியொன்றில் அந்த நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகார சட்டத்தின் 38(1)(ஈ) உபபிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கபட நேரிடுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன், மேலும் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும். அவ்வாறாயினும், 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டலின் 6.6 பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கான ஆளுகை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள்**

தாபனத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2020 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **நிதிக்கூற்று விடயம்** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| சொத்துக்கள் | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 6,458,394,856 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 4,592,315,521 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 11,050,710,377 |

| | |
|---|---|
| உரிமை மற்றும் பொறுப்புக்கள் | |
| உரிமை | (2,941,269,573) |
| பொறுப்புக்கள் | |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 8,310,536,743 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 5,681,443,207 |
| **மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரிமை** | 11,050,710,377 |
| மொத்த வருமானம் | 26,393,113 |
| மொத்த செலவுகள் | 645,368,369 |
| **மிகை/ (பற்றாக்குறை)** | **(618,975,255)** |

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 தாபனத்தை மீள்கட்டமைத்தல்

தாபனத்தை நிறுவிய குறிக்கோள்கள் நிறைவேற்றப்படாமையினால் பொருளாதாரத்திற்கு செயற்திறனுள்ள பங்களிப்பொன்று வழங்கப்படாமை மீது தாபனைத்தை மீள் கட்டமைப்பதற்கு வர்த்தக வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் (சதொச) மீள்கட்டமைத்தல் என்ற தலைப்பில் 2023 ஜுன் 26 ஆந் திகதி வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2023 ஜுலை 10 திகதிய அமப/23/1208/627/018 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தாபனத்தை மீள்கட்டமைப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அந்த தீர்மானத்தின் படி கட்டாய இளைப்பாற் வைத்தல் திட்டம் (CRS) கீழ் தாபனத்தில் கடமையாற்றிய அனைத்து ஊழியர்களும் (288 பேர்) 2023 செப்தெம்பர் 30 திகதி இளைப்பாறப்பட்டிருந்தது. அதற்கான நட்டஈடு என ரூபா 353,754,444 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் (சதொச) மீள் கட்டமைத்தல் என்ற தலைப்பில் 2023 ஜுன் 26 திகதி வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2023 ஜுலை 10 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் அவதானிப்பு இலக்கம் 1.1 இற்கு இணங்க அப்போது காணப்பட்ட பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் அசையும் சொத்துக்களை விற்பனை செய்யப்பட | பதில் அளிக்கப்படவில்லை. | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியதுடன் அந்த அவதானிப்புக்களின் கீழ் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. எவ்வாறாயினும் தாபனத்தின் 51 லொறி வண்டிகள் 2024 ஜனவரி வரை விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கான பணிப்பாளர் சபை அங்கீகாரம் 2024 திசெம்பர் 03 திகதி வரை கணக்காய்விற்கு சமரப்பிக்கப்படாமையால் அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க செயற்பட்டது என உறுதிப்படுத்தப்படவில்லை. | | |
| (ஆ) | 2023 நவம்பர் முதல் 2024 நவம்பர் வரை தாபனத்தின் பணிப்பாளர் சபை தீர்மானம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | பணிப்பாளர் சபை தீர்மானம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 395(அ) | தாபனத்தினால் பேணிச் செல்லப்படுகின்ற 08 நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக 2023 செப்தெம்பர் மாதம் முதல் 2024 செப்தெம்பர் மாதம் வரை காலப் பகுதிக்கான வங்கி இணக்கக் கூற்றுக்கள் 2024 ஒக்தோபர் 31 திகதியளவிலும் தயாரித்திருக்கவில்லை. அந்த காலப் பகுதிக்கான வங்கிக் கூற்றுக்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023.09.30 திகதி கூட்டுத்தாபனத்தின் அனைத்து ஊழியர்களும் கட்டாய ஓய்வு பெறச் செய்யப்பட்டமையால் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு உத்தியோகத்தர் காணப்படாமையால் இந்த செய்முறை தாமதமடைந்ததுடன், புதிய பதில் கடமை தலைவர் ஒருவர் 2024.10.14 திகதி நியமனம் செய்யப்பட்டமையால் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அதன் படி எதிர்காலத்தில் வங்கி இணக்கக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் என. | |
| | (ii) நிதிப் பிரமாணம் 756(6) | மீளாய்வாண்டின் பண்டக் கணிப்பீட்டு அறிக்கைத் திகதியளவிலும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் அனைத்து ஊழியர்களும் கட்டாய ஓய்வில் அனுப்பியிருந்தமையால் பண்டக் கணிப்பீடு மேற்கொள்ள முடியவில்லை. எதிர்காலத்தில் பொருத்தமான பதவியணி ஒன்று இணைப்பதன் மூலம் பண்டக் கணிப்பீடு மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அந்த அறிக்கையின் பிரதியொன்று எதிர்காலத்தில் வழங்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு பண்டக் கணிப்பீடு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 செப்தெம்பர் 14 திகதிய கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் பணிப்பாளர் சபை சுற்றறிக்கை இலக்கம் 01/2023 இன் 7 ஆம் பந்தி மற்றும் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 | ஊழியர்களினால் தாபனத்திலிருந்து பெற்றிருந்த கடன்களை தாபனத்திற்கு செலுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த அனைத்து அறவீடுகள் மற்றும் ஒழுக்காற்று கட்டளைகள் மீது செலுத்த வேண்டிய அனைத்து கொடுப்பனவுகளையும் கழித்த பின்னர் நட்டஈட்டுத் தொகை விடுவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது ஏற்பட்டிருந்த வீதி குறைவுகளுக்காக ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 16,530,969 தொகை பணத்தினை அறவீடு செய்யாமல் நட்டஈட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கணக்குகள் மற்றும் சட்டப் பிரிவின் மூலம் சான்றுபடுத்தப்பட்டு வழங்கப்பட்டிருந்த தகவல்களின் படி ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய அனைத்து அறவீடுகளும் அறவிடப்பட்ட பின்னர் நட்டஈடு கணிக்கப்பட்டு இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது எனவும் மற்றும் அறவிடப்பட வேண்டிய வீதிக் குறைவுகள் தொடர்பாக முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட்ட பின்னர் மேலதிக தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என. | ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக | பதில் அளிக்கப்படவில்லை. | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய |

| | | |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த லங்கா சதொச கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் படி அத் தினத்தில் உள்ளவாறு தாபனத்திற்கு அந்தக் கம்பனியில் இருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 1,688,225,936 தொகையாக காணப்பட்டதுடன், தாபனத்தில் இருந்து இந்த கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 10,083,353 தொகையாக காணப்பட்டது. | | மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த தானத்தின் ஆதனங்களுக்காக 2023 ஆண்டிற்காக பெற வேண்டிய ரூபா 17,031,455 தொகை மற்றும் 2024 ஜனவரி முதல் ஜுன் வரை பெற வேண்டிய ரூபா 67,831,100 தொகை ஆக மொத்தம் ரூபா 84,862,555 தொகைக்கான குத்தகை வருமானம் 2024 ஜுலை 15 திகதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | மாதாந்த குத்தகை அறவீடு செய்தல் தொடர்பாக விரிவான பகுப்பாய்வொன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் நிலுவை குத்தகை வருமானம் அவற்றை சேகரித்தல் தொடர்பான அலுவல்கள் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட விரிவான அறிக்கையொன்று எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் என. | குத்தகை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | எழுத்துமூல உடன்படிக்கையொன்று மேற்கொள்ளாத காரணத்தினால் லங்கா சதொச கம்பனியினால் இன்வொயிஸில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியை விட குறைவாக குத்தகை செலுத்தப்பட்டிருந்தமையால் 2023 செப்தெம்பர் முதல் 2024 பெப்ரவரி வரையான காலப்பகுதியினுள் தாபனம் இழந்துள்ள குத்தகை வருமானம் ரூபா 13,161,592 தொகையாகக் காணப்பட்டது. | லங்கா சதொச நிறுவனத்துடன் இணங்கியிருந்த குத்தகை உடன்படிக்கை மீண்டும் குத்தகை வருமான மதிப்பீடொன்று பெற்றுக் கொண்ட பின்னர் நிலுவை குத்தகைத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என. | ஆதனங்களை குத்தகைக்கு கொடுக்கும் போது முறையான பெறுமதி மதிப்பீட்டின் மீது எழுத்துமூல உடன்படிக்கைகள் அணுக வேண்டும். |
| (இ) | தனியார் குத்தகையாளர்கள் 21 பேருடன் எழுத்துமூல உடன்படிக்கைக்கு அணுகியிருக்காமல் வருடாந்த குத்தகை வருமானம் ரூபா | இது தொடர்பாக தகவல்கள் ஏதும் காணப்படாததுடன் எதிர்காலத்தில் தகவல்களை உறுதிப்படுத்திய பின்னர் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | 1,558,786 தொகைக்கான 35,332 சதுரஅடி ஆதனம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. | விரிவான விளக்கமொன்று சமர்ப்பிக்கப்படும் என. | |
| (ஈ) | அனைத்து ஊழியர்களும் இளைப்பாற்றப்பட்ட பின்னர் தாபனத்தின் அலுவல்களுக்காக பதில் கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்த வ/ப லங்கா சதொச கம்பனியின் 30 உத்தியோகத்தர்களுக்கு 2023 ஒக்தோபர் 01 திகதி முதல் 2024 ஆகஸ்ட் 31 திகதி வரையான காலப் பகுதியில் கூட்டுத்தொகை ரூபா 4,410,412 தொகை படியாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அந்த உத்தியோகத்தர்களின் நியமனங்களுக்குரிய நியமனக் கடிதங்கள், கடமை சாட்டுதல் பட்டியல்கள் மற்றும் படி செலுத்துவதற்குரிய கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல், சொத்துக்கள் முகாமைத்துவம், வங்கிக் கணக்குகள், செலவு முகாமைத்துவம் மற்றும் குத்தகை வருமானம் சேகரித்தல் ஆகிய செயற்பாட்டு அலுவல்களை செயற் திறனுடன் மற்றும் காலரீதியாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | லங்கா சதொச நிறுவனத்தின் ஊழியர்கள் தற்காலிகமாக வேலையை அணவல் செய்யு் அடிப்படையின் கீழ் அவ்வப்போது இணைக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட அனைத்து தகவல்களும் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் என. | சேவையின் தேவைப்பாட்டிற்கு பொருத்தமான முறையில் பதில் கடமை மேற்கொள்ள வேண்டியதுடன் குறிப்பிட்ட உத்தியோகத்தரினால் தமது பொறுப்புக்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படுகின்றது என முகாமைத்துவத்தினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(உ) பிரிவிற்கு இணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான போது குறிப்பிட்ட காலப் பகுதியினுள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 ஒக்தோபர் 16 திகதி முதல் 2024 செப்தெம்பர் 10 வரை வழங்கப்பட்டிருந்த 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக இந்த அறிக்கைத் திகதி வரை பதில் அழித்திருக்கவில்லை. | அனைத்து ஊழியர்களும் இளைப்பாற்றப்பட்டிருந்ததால் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்குவதற்காக தாமதமொன்று ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் வினவப்பட்டுள்ள தகவல்கள் முறைப் பிரகாரம் வழங்கப்படும் என. | கணக்காய்வு ஐய வினாக்களுக்கு விரைவாக பதில் அனுப்ப வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாபனத்தில் காணப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் தாபனத்தினால் நிறுவகிக்கும் இரண்டு கம்பனிகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய முன் நடவடிக்கைகள் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தை ஒழித்தல் தொடர்பாக தீர்மானிப்பதற்காக உத்தியோகத்தர் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அந்த குழுவின் அறிக்கை 02 மாதங்களுக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென 2023 ஜூலை மாதம் 10 திகதி அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அந்த குழுவின் அறிக்கை அடங்கிய அமைச்சரவை விஞ்ஞாபனம் 11 மாத கால தாமதத்துடன் 2024 ஆகஸ்ட் 23 திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் படி தாபனத்தை ஒழிப்பதற்கு 2024 செப்தெம்பர் 02 திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அவ்வாறாயினும் கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஒக்தோபர் 31 திகதியளவிலும் அமைச்சரவை தீர்மானம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கியிருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 நவம்பர் முதல் 2024 ஜனவரி வரை காலப் பகுதியினுள் தாபனத்திற்கு சொந்தமான 51 லொறி வண்டிகள் திறந்த சந்தையில் கூறுவிலைகள் அழைப்பதன் மூலம் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் விற்பனை செய்யப்பட்ட 43 லொறி வண்டிகள் அதாவது, 84 சதவீதம் இரண்டு கொள்வனவாளர்களுக்கு மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்தது. | அமைச்சரவை பத்திரத்தின் படி ஊழியர்களை இளைப்பாற்றுவித்தல் தொடர்பாக மொத்த நட்டஈட்டுத் தொகை சதொச நிறுவனத்தில் காணப்பட்ட வைப்புக்கள் மூலம் மற்றும் மீதித் தொகை மோட்டார் வாகனங்கள் தேறியதன் மூலம் பெற்றுக் கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் அதன் படி லொறி வண்டிகள் ஒரு குறிப்பிட்ட அளவு விற்பனை செய்யப்பட்டிருந்தது | ஆதனங்கள் விற்பனை செய்யும் போது நிறுவனத்திற்கு கூடிய நலன்கள் பெறக் கூடியவாறு வினைத்திறனுடன் தீர்மானங்கள் எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | என தகவல்கள் கண்டறியப்பட்டது. இந்த லொறி வண்டிகள் விற்பனைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் அதற்குரிய டென்டர் தொடர்பான ஆவணங்கள் பரிசோதனை செய்த பின்னர் எதிர்காலத்தில் மேலதிக விபரங்கள் சமர்ப்பிக்கப்படும் என. | |
| (ஆ) | வழங்கள் கடிதத்தின் படி கடிதம் கிடைத்து 10 நாட்களுக்குள் லொறி வண்டிகளுக்கான பணம் செலுத்த வேண்டுமென கொள்வனவாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 18 லொறி வண்டிகளுக்காக பணம் கிடைத்த 08 நாட்கள் முதல் 62 நாட்கள் வரையான தாமதம் அடைந்திருந்தது. | இது தொடர்பாக விடயங்களை கண்டறிந்து எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் என. | அறவிடப்பட வேண்டிய தொகை குறிப்பிட்ட காலத்தில் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | விற்பனை செய்யப்பட்ட 51 லொறி வண்டிகளுக்காக 2023 திசெம்பர் 20 திகதி முதல் 2024 ஜுன் 26 திகதி வரையான காலப்பகுதியினுள் ரூபா 183,985,149 இற்கான தொகையொன்று கிடைத்திருந்ததுடன், இந்த பணம் வ/ப லங்கா சதொச கம்பனிக்கு சொந்தமான வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்படவில்லை. | தாபனத்தின் சொத்துக்கள் விற்பனை மூலம் கிடைத்திருந்த பணம் தாபனத்தின் வங்கிக் கணக்கில் சேகரிக்கப்பட வேண்டும். |

### 3.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 செப்தெம்பர் 25 திகதி மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனையின் படி தாபனத்திற்கு சொந்தமான 37 லொறி வண்டிகள் மற்றும் 02 மோட்டார் சைக்கிள்கள் தாபனத்தின் போக்குவரத்து செயற்களத்தில் விளைவற்று நிறுத்தப்பட்டிருந்ததுடன், மறைப்புக்கள் இன்றி இயற்கை அழிவுகளுக்கு ஆளாகி ஒரு வருடத்திற்கு மிகையான காலம் முதல் நிறுத்தப்பட்டிருந்த காரணத்தினால் துருப்பிடித்துக் காணப்பட்டது. மேலும் அந்த சந்தர்ப்பத்தில் கூட்டுத்தாபனத்தில் பௌதீக ரீதியாக காணப்படாத 02 | பதில் அளிக்கப்படவில்லை. | சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் உச்ச மட்ட செயற்திறனுடன் பயன்படுத்துதல் அல்லது பொருத்தமான விதத்தில் அப்புறப்படுத்தல் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | லொறி வண்டிகள் ஒரு வருடத்திற்கு மிகையான காலம் முதல் கராஜிற்கு அனுப்பப்பட்டிருந்தது என கண்டறியப்பட்டது. | | |
| (ஆ) | 18 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் குறைபயன்பாட்டுடன் காணப்பட்ட ஒரு மணித்தியாலத்திற்கு 2,000 கி.கி. தயாரிக்கக் கூடிய கொள்திறனுடனான தாபனத்திற்கு சொந்தமான ஹிங்குரங்கொட மற்றும் பன்னெகமுவ அரசி தயாரிக்கும் இரண்டு கட்டிடத் தொகுதிகள் 2024 ஆகஸ்ட்ட 20 திகதியளவிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | அனைத்து ஊழியர்களும் கட்டாயமாக இளைப்பாற வைத்தமையால் அதற்குரிய விரிவான தகவல்கள் பெற்றுக் கொள்ள முடியாது என. | தாபனத்திற்கு சொந்தமான சொத்துக்களை வருமானம் உழைப்பதற்காக செயற்திறனுடன் பயன்படுத்த வேண்டும். |